# விமலையார் இலம்பகப் பெயர் பொருத்தமும் பாத்திரக் கட்டமைப்பும்

*முனைவர் ஹ. அல்தாஜ் பேகம்*
உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை ஆய்வு மையம்
ஸ்ரீ பராசக்தி மகளிர்கல்லூரி, குற்றாலம்

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: ஜூலை

வருடம்: 2022

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.34293/sijash.v10iS1-Jul.5038

## முன்னுரை

தமிழின் பெருமைகளையும் சிறப்பினையும் வாழ்வியல் கூறுகளையும் உணர்த்துபவை காப்பியங்கள் ஆகும். பாத்திரக் கட்டமைப்பு அல்லது பாத்திரப் படைப்பு என்பது ஓர் படைப்பாளர் தான் படைக்கும் கதாப்பாத்திரங்களை கதையின் சூழலுக்கு ஏற்ப கட்டமைக்கும் விதமாகும். எனலாம். இவ்வகையில் இந்த விமலையார் இலம்பகத்தில் இடம்பெறுகின்ற இயல்பான தன்மைகளையும் அக்கதாப்பாத்திரங்களுக்கு உரிய நுட்பமான திறன்களையும் இலம்பகப் பெயரையும் திருத்தக்கத்தேவர் எங்ஙனம் கதாப்பாத்திரங்களுக்கேற்ப கட்டமைத்துள்ளார் என்பதை ஆய்வதாக இந்தக் கட்டுரை அமைகின்றது.

மேலும் காப்பியத்தில் சீவகசிந்தாமணி பெறும் இடத்தையும், விசயையின் அறிவுரைகள் கலந்த அறவுரைகளையும், விமலை பந்தாடும்அழகும்,சீவகன்விமலைதிருமணம்குறித்தநிகழ்வுகளையும் பாத்திரக் கட்டமைப்பின் வழி ஆய்ந்து விளக்குவதாக இவ்வாய்வு அமைந்துள்ளது.

## ஆய்வின் நோக்கம்

ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றான சீவகசிந்தாமணியிலுள்ள விமலையார் இலம்பகத்திற்கு ஆசிரியர் வைத்த பெயர் சரிதானா?' என்பதையும் இதில் இடம்பெறும் கதாப்பாத்திரங்கள் பொருத்தமுறக் கட்டமைக்கப்பட்டுள்ளதா? என்பதையும் ஆய்ந்தறிவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## பெருங்காப்பியத்திற்குரிய இலக்கணம்

“அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நாற்பொருளை பயனாகத் தருவதாக அமையும். தன்னிகரில்லா தன்மை உடையவனை காப்பியத் தலைவனாக கொண்டிருத்தல் வேண்டும். மலை, கடல், நாடு, நகர், ஆறு பருவங்கள், கதிரவன் தோற்றம், சந்திரன் தோற்றம் ஆகியவற்றை பற்றிய வருணனைகள் கொண்டிருக்க வேண்டும்.

**"பொன்முடி சூடல் பொழில் விளையாடல்**
**புனலாடுதல் நன்மணஞ்**
**செய்தல் நறவூண் களிப்பு கலவிதுனி**
**மன்னும் புதல்வர்ப் பெறுதனன் மந்திரத்**
**தூது செல்லல்**
**இன்னிகல் வென்றி வகைசந்தி கூறலின்**
**காப்பியமே''**

**(நவ.பா.63)**

என்று பாட்டியல் நூல் கூறுகின்றது.

### சிறுகாப்பியத்தின் இலக்கணம்

அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கனும் 1,2,3 குறைந்து வருவது சிறுகாப்பியமாகும்.

**"அறமுதல் நான்கினுள் குறைபாடுடையது**
**காப்பியம் என்று கருதப் படுமே''**

**(தண்டி.,நூ.எ.10)**

### காப்பிய உறுப்புகள்

காப்பிய உறுப்புகளாவன:

1.கதை அமைப்பு
2.தலைவன்
3.பாத்திரப்படைப்பு
4.கிளைக்கதைகள்.

### கதை அமைப்பு

காப்பியத்தில் உயிர்நாடியான கதை காலத்திற்கும், காப்பிய ஆசிரியனின் நோக்கத்திற்கு ஏற்ப அமையும். வாய் மொழிக்கதைகள், பழமரபுக்கதைகள், வரலாற்று நிகழ்ச்சிகள், கற்பனையுள் எழுந்தவை என்பனவற்றுள் ஏதேனும் ஒன்றின் அடிப்படையில் கதை அமையும்.

### பாத்திரப்படைப்பு

பாத்திரப்படைப்புகள் தான் காப்பியங்களை உயிர்ப்பிப்பவையாகும். காப்பியத்தில் எல்லா பாத்திரங்களும் ஒரே சீராக பங்குபெறுவதில்லை. காப்பியத்தின் தொடக்கம் முதல் இறுதி வரை கதை நிகழ்ச்சிகளில் பங்கேற்கும் பாத்திரங்களை முதன்மைப் பாத்திரங்கள் எனலாம். ஒன்று இரண்டு செயல்களோடு காப்பிய அரங்கிலிருந்து மறைக்கின்ற பாத் திரங்களை துணை பாத்திரங்கள் எனலாம். மேலும் எதிர்நிலை பாத்திரங்களும் உண்டு.

### தலைவன்

மக்களின் நற்பண்பு மிக்கவர்களை காப்பியத் தலைவர்களாக கொள்ளும் மரபு உள்ளது. தன்னேரில்லா தலைவன் என்பவன் பேராண்மை, எல்லோரையும் தன்வயப்படுத்தும் தகுதி, உயர் பண்புடைமை, விழுமிய கல்வியறிவு, அனைவரையும் ஈர்க்கும் தோற்றப் பொலிவு, அனைவராலும் விரும்பப்படும் இயல்பு, தான் வாழும் காலத்திலேயேத் தன்னைப் பற்றிய வரலாறு தோன்றக் காரணமாக இருத்தல் போன்ற தலைமைப் பண்புகள் உடையவனாய் இருத்தல் வேண்டும்.

### சீவகசிந்தாமணி

தமிழில் முழுமையாகக் கிடைக்கும் காப்பியங்களுள் ஒப்பற்றதாய்த் திகழ்வது சீவகசிந்தாமணி ஆகும். விருத்தம் என்னும் புதிய பா இனம் - இந்நூலில் முதன் முறையாகக் கையாளப்பட்ட சிறப்புடையது. கம்பராமாயணம், பெரியபுராணம் முதலிய காப்பியங்களுக்கு அடிப்படையாகவும் முன்னோடியாகவும் அமைந்த பெருமையுடையது.

"வடமொழியில் உள்ள சீவகன் கதைகள் பலவற்றைப் பின்பற்றித் தமிழில் பாடப்பட்டது சீவகசிந்தாமணி, முதல் நூல் சத்திரசூடாமணி என்பர்.'' (துரைச்சாமிப்பிள்ளை.சு, சீவகசிந்தாமணி ஆராய்ச்சி, 2001, ப.11)இதில் 3145 விருத்தப்பாடல்கள், 13 இலம்பகங்களும் இடம்பெற்றுள்ளன.

### சீவகசிந்தாமணி பெயர்க்காரணம்

சீவகசிந்தாமணி என்னும் தொடரில் உள்ள சீவகன் என்பது காப்பியத்தலைவன் பெயராகும். "சிந்தாமணி என்பது

தேவலோகத்தில் உள்ள மணியாகும் கற்பகத்தரு போன்றும் காமதேனு போன்றும் கேட்பவர்களுக்கு கேட்டனவற்றை எல்லாம் தருகின்ற இயல்புடையதாகும்'' என்பர். (துரைச்சாமிப்பிள்ளை.சு, சீவகசிந்தாமணி ஆராய்ச்சி, ப.9) "சீவகனுடைய கதையைக் கூறும் சிந்தாமணி போன்ற காப்பியம் என்ற பொருளால் சீவகசிந்தாமணி எனப் பெயரிட்டுள்ளார் திருத்தக்கதேவர்'' என்று கூறப்படுகிறது. (ஸ்ரீசந்திரன்.ஜெ, சீவகசிந்தாமணி முதல் தொகுதி, பக்.19)

**விமலையார் இலம்பகம் பெயர்க்காரணம்**

சாகரதத்தன் என்னும் இராசமாபுரத்து வணிகன் மகள் விமலையைச் சீவகன் மணம் கொண்ட பகுதியை கூறுவதாலும், விமலை பந்தாடுதல், மற்றும் அவளின் அழகு வருணனைகளும் இடம்பெறுவதால் இப்பகுதிக்கு, விமலையார் இலம்பகம் என்றுதிருத்தக்கதேவர் பெயரிட்டார் எனக் கூறப்படுகிறது. இதில் 106 விருத்தப் பாடலகள் இடம்பெற்றுள்ளன.

**பாத்திரக் கட்டமைப்பு**

தனி மனிதப் பண்புகளையோ அப்பண்புகளின் அடிப்படையில் அவர்கள் செய்யும் செயல்களையோ காப்பியம் தன் கதையில் பயன்படுத்திக் கொள்ளும் காப்பியத்தில் வருகின்ற தனித்தனி மனிதனின் பண்புகளையும், செயல்பாடுகளையும் காப்பிய ஆசிரியர் பாத்திரப்படைப்பு மூலம் வெளிக்கொண்டு வருகிறார்.

பாத்திரங்கள் தான் கதையை நடத்திச் செல்கின்றன. பாத்திரங்களின் வாழ்க்கையை முழுமையாகவோ, அதில் சுவையான ஒரு பகுதியையோ விளக்கமாக எடுத்து உரைப்பது தான் காப்பியத்தின் பணியாகும். ஆங்கிலத்தில் இதனை, characterization எனக் கூறுவர்.

**கதாப்பாத்திரங்களும், கதைச்சூழலும்**

விசயை சீவகனுக்குக் கூறிய அறவுரைகளும், சீவகன் தெருவில் சென்ற காட்சி, விமலை சீவகனைக் காணுதலும் திருமணமும் முக்கிய நிகழ்ச்சிகளாக இடம்பெறுகின்றன. சீவகன் தவப்பள்ளியை அடைந்து, அங்கு குதிரையிலிருந்து இறங்கினான் சீவகனைக் கண்டதும் விசயமாதேவி தாயன்புடனும் கண்ணீருடனும் சீவகனை தன் மார்போடு கட்டியணைத்தாள். சீவகன் விசயையின் காலில் விழுந்து வணங்கினான். இருவரும் அன்புக்கடலில் ஆழ்ந்தனர். விசயை சீவகனை அன்புடன் உபசரித்தாள். சீவகனுக்குக் கட்டியங்காரனை வீழ்த்தவும் அரசனின் நெறிமுறைகள் பற்றியும் உனது மாமனை துணைக்கோடவும் என்று விசயை அறிவுரை கூறியவுடன், சீவகன் தன் தாயை தைரியத்தோடு இருக்கவும் என்று கூறி, பின் சீவகன் இராசமபுரம் அடைந்த போது, அந்நகரத்தில் வசிக்கும் வணிகனான சாகரதத்தனின் மகள் விமலை அழகுடன் பந்தாடிக் கொண்டிருந்தாள். அவளின் அழகில் சீவகன் மயங்கி சாகரதத்தனின் கடையருகே நின்றான். சோதிடன் முன்பே கூறிய கூற்றுப்படி அவன் வந்ததும் சாகரதத்தனின் கடையிலுள்ள பழைய பொருட்கள் எல்லாம் நல்ல விலைக்கு விற்கப்பட்டன. தன் கடையருகே சீவகனைக் கண்ட சாகரதத்தன் தன் மகளின் கணவன் என்று கூறி சீவகனுக்குத் தன் மகளை மணமுடித்து வைத்தான். இருவரும் இரண்டு நாள் கூடி இன்புற்றிருந்த பின்பு கட்டியங்காரனை தோற்கடிப்பதற்காக பதுமுகன் முதலான தன் நண்பர்களுடன் சேர்ந்து புறப்பட்டான்.

**விமலையார் இலம்பகத்தில் இடம்பெறும் பாத்திரங்கள்:**

1.சீவகன்
2.விசயை
3.விமலை
4.கமலை

5.சாகரதத்தன்
6.சோதிடன்
7.கட்டியங்காரன்
8.கோவிந்தன்
9.பதுமுகன்
10.நந்தட்டன்

**பாத்திரங்களின் பண்புநலன்கள்**

**முதன்மை கதாப்பாத்திரம் - சீவகன்**

விசயை என்னும் வீரமிக்க பெண்ணின் மகனாகச் சீவகனை ஆசிரியர் கட்டமைத்த விதம் சாலப்பொருத்தமே. சீவகன் அழகிலும், குணத்திலும், வீரத்திலும் சிறப்புமிக்கவனாக விளங்குவதாக பாத்திரத்தை வடிவமைத்தது காப்பிய ஓட்டத்திற்கும் தலைமைக் கதாப்பாத்திரத்திற்கும் பொருத்தமாக அமைந்துள்ளது.

**துணைமைக் கதாப்பாத்திரம் - விசயை**

தாய்மைக் கதாப்பாத்திரத்தோடு தூய்மையான அன்புள்ளமும், வீரம்மிக்க பெண்மணியாகவும் தோல்வியை வெற்றியாக்கும் திறன்மிக்க பெண்ணாகவும் திருத்தக்கத்தேவர் விசயை கதாப்பாத்திரத்தைக் கட்டமைத்துள்ளார்.

**துணைமை கதாப்பாத்திரம் - விமலை**

விமலை ஒரு அழகிய பெண்ணாகவும் மிகப்பெரிய வணிகனின் செல்வ மகனாகவும் பந்தாடுதல் முதலான பல்வேறு திறன்களைப் பெற்றவளாகவும் காட்சிப்படுத்தியிருப்பது சிறப்புக்குரியதாகும்.

**பிற கதாப்பாத்திரங்கள் - சாகரதத்தன்**

இராசமாபுரத்தின் மிகப்பெரிய வணிகனாகவும் நல்ல திறன்களைக் கொண்ட விமலையின் தந்தையாகவும் மகளுக்கு திருமணம் முடிக்க வேண்டும் என்னும் கடமைகளைக் கொண்ட தந்தையாகவும் ஆசிரியர் சாகரதத்தன் என்னும் கதாப்பாத்திரத்தைக் கட்டமைத்துள்ளார்.

**பிற பாத்திரங்களின் கூற்றுகளில் இடம் பெறும் கதாப்பாத்திரங்கள்:**

கமலை, கட்டியங்காரன், கோவிந்தன், பதுமுகன், சோதிடன், நந்தட்டன் போன்ற கதாப்பாத்திரங்கள் பிற மாந்தர்களின் கூற்றுகளில் இடம் பெற்றாலும் அக்கதாப் பாத்திரங்களே பேசுவதாக இடம்பெறவில்லை.

**சீவகன் விசயைக்கு ஆறுதல் கூறுதல்:**

தீப்போன்ற ஆற்றலும் இடி போன்ற குருலும் உடைய சிங்கம் நரியுடன் போர் செய்வதாயின் சூழ்ச்சியும் துணையும் வேண்டுவதுபோல் கட்டியங்காரனாகிய பாம்பு நந்தட்டனாகிய கருடனால் அழிக்கப்படும். இது குறித்து கவலை கொள்ளல் வேண்டா என்று சீவகன் விசயைக்கு ஆறுதல் கூறினான்.

**“எரியொடு நிகர்க்கு மாற்ற லிடிக்குரற் சிங்க மாங்கோர்**
**நரியோடு பொருவ தென்றால் சூழ்ச்சிநற் றுணையே டேன்னாம்**
**சோரிமதுச் சுரும்புண் திண்ணிச் சூழ்கழ னந்த னென்றான்”**

***(சீவக.1925:1-3)***

என்ற பாடல் வழி அறியலாம்.

**விசயை சீவகனுக்கு அறிவுரைக் கூறுதல்**

காட்டில் உள்ள ஒரு காக்கையே அளவற்ற கோட்டான்கள் இருக்கும் இடத்தின் கண் அக்கூகைகள் வருந்துமாறு பகற்பொழுதில் சென்று அங்கே அவற்றின் போன்று, இடத்தையும் காலத்தையும் ஆராய்ந்து செய்தால் வெற்றி நிச்சயம். அஞ்சாதவராய் அறியாமையின்று நீங்கிச் செயலைச் செய்யும் அறிவை உடையவர்க்கு செய்தற்கரிய செயல் உண்டோ?! இல்லை. இதனை,

**“பகல்வெல்லும்கூகையைக்காக்கைஇகல்வெல்லும்**
**வேந்தர்க்கு வேண்டும் பொழுது”**

***(குறள் 481)***

என்ற குறளின் மூலம் அறியலாம்.

**விமலையின் பந்தாட்ட நிகழ்வு**

சங்ககால இலக்கியங்களான சிற்றிலக்கியங்களில் பந்தாட்டத்தினை பெண்கள் மட்டும் ஆடும் ஆட்டமாகவே சித்தரித்துள்ளனர். பந்தாட்டம் என்பது 96 வகை சிற்றிலக்கியங்களில் ஒன்றான குறவஞ்சியில் இடம்பெறும் முக்கிய நிகழ்வாகும். பிற்கால இலக்கியங்களில் சிறுவர்கள் பந்தாடும் முறை காணமுடிகிறது. தற்காலத்தில் ஆடவர் ஆடும் ஆட்டமாகவே மாறிவிட்டது. பெண்கள் பந்தாடும் களம் பொதுவாக தங்கள் முற்றம், கன்னிமாடங்களையும் தேர்வு செய்வது வழக்கம். சீதை பந்தாடியது கன்னிமாடத்தில் தான் என்பதை உறுதி செய்யும் வகையில் இராம நாடகத்தை இயற்றிய அருணாச்சலக்கவிரளாயரின் பாடல் வரிகள் இதற்குச் சான்றாகும்.

**"கன்னி மாடந்தண்ணில் முன்னே நின்றவர் யாரோ**
**இவர் யாரோ என்ன பேரோ''**

பெண்கள் பந்தாடும் கலங்களின் விளிம்புகள் முழுவதும் முத்துக்கள், பொன்னினால் பதிக்கப்பட்டிருந்தன. இது காண்பதற்கு வானுலகை பூமியிலே வைத்ததைப் போல் இருந்தது. அப்படிப்பட்ட அழகான இடத்தில் மகளிர் பந்தாடியதைக் பின்வரும் பாடல் கூறுகிறது.

**"முத்தம் வாய் புரிந்தன மொய்க திர்ப்பசும் பொனாற்**
**சித்தி ரத்தி யற்றிய செல்வ மல்கு பன்மணி**
**பத்தி யிற்கு யிற்றியவான் பதித்து வைத்த போல்வன**
**இத்தி றத்த பந்தெறிந் திளையராடு பூமியே''(2)**
**(சீவக.நாம.இ.பா.150)**

சீவகனின் தாயாகிய விசயை "பந்தாட்ட விரலினார் விசயை"(3) என்று ஆசிரியர் சிறப்பித்துள்ளார். திரிகூடராசப்பக் கவிராயர் வசந்த வல்லியின் பந்தாடும் அழகினை,

**"காதுக்குழையும், கண்ணுக்கெண்டையும் புரண்டு**
**புரண்டு ஆடின. குழல் மேகத்தில் இருந்த வண்டுகள்**
**கலைந்தோடுவது கண்டு காமல் வில்லுப்**
**பூவில் இருந்த வண்டுகள் ஓடி''(4)**
**(குற்.குற.பா.3)**

எனக் குற்றாலக் குறவஞ்சியில் காட்டுகிறார். விமலை பந்தாடுதல் சீவகசிந்தாமணியில் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது.

**"மாலை புட்க ரந்த பந்து வந்து கைத்தலத்தவாம்**
**ஏல நாறி ருங்கு ழற்பு றத்த வாண்மு கத்தவாம்**
**நூலி னோநுசுப்பு நோவ வுச்சி மாலை யுள்ளவாம்**
**மேலெ ழுந்த மீநி லத்த விர லகைய வாகுமே"**
**(சீவக.1954:1-4)**

என்று விமலையாரின் பந்தாட்டத்திறன் சிறப்பிக்கப்படுகிறது.

சங்கப் புறப்பாடல்களில் தோல்வியுற்ற மன்னர்களை இழிவுபடுத்த விரும்பிய வெற்றி வேந்தர்கள் தோற்றவர்களின் மதிலில் பந்து, பாவை ஆகியவற்றைத் தொங்க விட்டனர்.

**"மதில்மேல் வரிப்புனை பந்தொடு பாவை தூங்கப்**
**பொருநரைத் தேய்த்த போரரு வாயில்''**
**(திருமுருகு.பா 68-69)**

என்று திருமுருகாற்றுப்படை இயம்புகிறது. இவ்வாறு சங்க இலக்கியங்கள், காப்பியங்களில் பந்தாட்ட நிகழ்வுகளை சுட்டிக்காட்டும் வகையில் ஏராளமான செய்திகள் உள்ளன. அவ்வாறே சீவகசிந்தாமணியில் விமலை பந்தாடுதல்,

**"வேனெடுங் கண்களம்பா விற்படை சாற்றி யெங்கும்**
**தேநெடுங் கோதை நல்லார் மைந்தனைத் தெரு லெய்ய**
**மானெடு மழைக்க ணோக்கி வானவர் மகளு மொப்பாள்**
**பானெடுந் தீஞ்சொல் லாளோர் பாவைபந் தாடுகின்றாள்**
**(சீவக.1951:1-4)**

என்ற பாடல் வரிகள் விமலை பந்தாடுதலை உணர்த்துகிறது.

மான் போன்ற கண்களை உடையவளும் தேவ மகளைப் போன்றவளும், பால் போன்ற இனிய சொற்களை உடையவளும் ஆகிய விமலை ஒரே நேரத்தில் இரு கைகளிலும் ஐந்து பந்துகளை விடாமல் பந்தடிக்கும் திறனுடையவள். மேலே எழும்பியும், முறை தவறி கீழே விழுதல் அன்றியும் ஆடுகின்ற பந்து கீழே வந்து சேரும். ஒரு பந்து கையிலும் மற்றொன்று முகத்தின் முன்னேயும் பிறிதொன்று

கூந்தலுக்கு பின்னாகச் சென்று வட்டமாக வரும்படி பந்தாடும் வல்லமை உடையவன் என்று மேற்குறித்த பாடல் வரிகள் விளக்குகின்றன.

மேலும் இவள் மயில் போல துள்ளி பந்தாடுவதைக் கண்ட வண்டும், தும்பியும் தேன் உண்ணாமல் பாட வலிமையோடு விமலை பந்தாடியதை,

**"அங்கையந்த லத்த கத்த வைந்து பந்த மர்ந்தவை**
**மங்கை யாட மாலை சூழும் வண்டு போல வந்துடன்**
**பொங்கி மீதெ ழுந்து போய்ப்பி றழ்ந்து பாய்த லின்றியே**
**செங்கயற்கண் புருவந் தம்முளுருவஞ் செய்யத் திரியுமே"**

***(சீவக.1953:1-4)***

என்ற பாடலின் மூலம் அறியலாம்.

### விமலை சீவகன் காதல்

விமலையும் சீவகனும் ஒருவரை யொருவர் நோக்கும் போது,

**"நெஞ்சங் கலங்கி நிறையாற்றுப் பறித்து நின்றான்**
**அஞ்செங் கழுநீ ரலர்நதம்மதி வாண்முகத்தே**
**வஞ்சம் வழங்கா தவன் கண்களி ணோக்க மாதோ**
**தஞ்சம் வழங்கித் தலைக் கொண்ட காம வெந்தீ"**

***(சீவக.1964:1-4)***

என உள்ளம் கலங்கி நிறை அழிய நின்ற விமலையின் முகத்தைப் பொய்யுரையாத புண்ணியன் தன் கண்களால் நோக்க, அவளும் நோக்கினாள். அவ்வளவில் அவளைப் பற்றிருந்த காம நோய், சீவகனைப் புகலிடமாகக் கொண்டு அவனை அடைந்தது.

சாகரதத்தன் கடையில் விற்காமலிருந்த பொருள்கள் சீவகன் வருகையால் சோதிடன் கூற்றுப்படி விலையாகின.

**"என்றாங்கொன் மாதர் நலமெய்துவ தென்று சிந்தித்**
**தொன்றார்க் கடந்தான் புலம்புட்கொண் டிருந்த லோடும்**
**அன்றே யமைந்த பசும்பொன்னட ராறு கோடி**
**குன்றாமல் விற்றான் குளிர்சாகர தந்த னென்பான்**

***(சீவக.1973:1-4)***

என்று திருத்தக்கத்தேவர் காட்டுகிறார். பகைவரை வென்ற சீவகன் இப் பெண்ணின் இன்பத்தை அடைவது என்று கூடுமோ? என எண்ணி வருந்திக் கொண்டிருந்த போது, அந்த நாளிலேயே சாகரதத்தன் என்ற வணிகன் தன் விற்காமல் இருந்த பொருள்களைப் பசும்பொன் ஆறு கோடி என்ற எண்ணிற் குறையாமல் விற்கப்பட்டன. தன்னிடம் இருந்த விலை போகாத பொருள்கள் எல்லாம் விற்றுப்போனதை உணர்ந்த சாகரதத்தன் சீவகனை நோக்கி தனக்குச் செல்வம் மிகுமாறு வந்த திருமகள் போன்றவனே, என்று அவனை அடைந்து இனி உமக்கு தன் இல்லம் இருப்பிடமாகும். என்று கூறி மலர்களால் தொடுக்கப்பட்ட மாலையை அணிந்த சீவகனை சாகரதத்தன் தன் இல்லத்திற்கு அழைத்துச் சென்றான்.

### சாகரதத்தன் சீவகனிடம் கூறியவை

சீவகனிடம் சாகரதத்தன் தன் மகளை திருமணம் செய்து கொள்க என்று பின்வருமாறு கூறுகிறான்.

**"ஏழாண்டின் மேலு மிரண்டாண்டிரன் டெய்தி நின்றான்**
**வீழா நிதியு முடன் வீழ்ந்தது வில்வலாய்க்கே**
**ஊழாயிற் றொல்கு நுசுப்பஃக வுருத்து வீங்கிச்**
**சூழாரம் வைத்த முலையாணலஞ் சூழ்க வென்றான்"**

***(சீவக.1978:1-4)***

"அச்சோதிடன் உரைத்தவாறே, இன்று செல்வம் குவிந்து விட்டது. இவளும் பதினொரு ஆண்டுகளைக் கடந்து பன்னிரண்டாவது வயதை அடைந்து விட்டாள். வில்லில் வல்லவனாகிய உனக்கு நல்வினையும் வாய்த்தது. எனவே, விசயையை திருமணம் செய்து ஆரத் தழுவி இன்பம் பெறுவாயாக!" என்று சாகரதத்தன் சீவகனிடம் கூறினான்.

### விமலை – சீவகன் திருமணம்

திருமணம் நடக்கும் வீட்டில் சங்கொலி, பறையொலி, ஆகியவை முழங்கும், மணச் சடங்கு நடைபெறும் போது திருமண முழவு (மத்தளம்) பெரிய முரசு, மணமுழவு, மணமுரசு ஆகியவை ஒலித்து மணிவினையை நகர மக்கட்கு உணர்த்தினர். அரசர் மணவினையில் பல்வகை இசைக் கருவிகளின் ஒலிகள் முழங்கின. குற்றமில்லா யாழும், குழலும், தண்ணுமையும், அழகிய முரசும் முழங்கின. கம்பராமாயணம் இதனை,

***“மங்கல முரசு இனம் மழையின் ஆர்த்தன:
சங்குகள் முரன்றன: தாரை, பேரிகை பொங்கின:
மறையவர் புகலும் நான்மறை, கங்குலின்
ஒலிகளும் மாகடலும் போன்றதே”(6)***

***(கம்ப.12)***

எனக் குறிப்பிடுகிறது. இவ்வாறு இலக்கியங்களில் திருமணம் பற்றிய செய்திகள் பல கூறப்பட்டுள்ளது. இந்த இலம்பகம் விமலையை பற்றி மட்டும் கூறாமல் சீவகன், தந்தை சாகரதத்தன், சோதிடன் முதலான பாத்திரங்களைப் பற்றிக் கூறுகிறது. சோதிடன் சிறுகதாப்பாத்திரமாக இருந்தாலும் கதையின் திருப்புமுனைக்குக் காரணமாக அமைவதோடு சீவகன்-விமலை திருமணம் நடப்பதற்கு வாய்ப்பாகவும் அமைகிறது.

இதில், காப்பிய ஆசிரியர் கதாப்பாத்திரங்களை மிகச்சிறப்பாக கட்டமைத்துள்ளார். தாய்-மகன் அன்பிற்கு விசயை-சீவகன் கதாப்பாத்திரமும், காதலுக்கு சீவகன்-விமலை கதாப்பாத்திரமும், வீரத் திற்கு சீவகன் கதாப்பாத்திரமும் தந்தையின் கடமையை உணர்த்துவதற்கு சாகரதத்தன் பாத்திரமும், விதிக்கு சோதிடன் கதாப்பாத்திரமும், சுற்றத்திற்கு பதுமுகன், நந்தட்டன், கோவிந்தன் கதாப்பாத்திரமும், பகைமைக்கு கட்டியங்காரன் கதாப்பாத்திரமும் என கனக்கச்சிதமாக கதாப்பாத்திரங்களைக் ஆசிரியர் கட்டமைத்த விதம் வெகுசிறப்பு. பாத்திரக் கட்டமைப்பில் விசயையும் சீவகனும் என்னும் பாங்கில் நோக்கின, விசயையின் அறவுரைகள், சீவகன் விசயையை சந்தித்தல், விசயையின் தாயன்பு கட்டியங்காரனை வீழ்த்துவதற்கான சூழ்ச்சி முதலானவற்றின் வழி ஆசிரியர் பாத்திரங்களைக் முறையாகக் கட்டமைத்துள்ளார் என்பது தெளிவாகிறது. பாத்திரக் கட்டமைப்பில் விமலையும் சீவகனும் என்னும் தன்மையில் நோக்கின்”, சீவகன் விமலையின் அழகைக் கண்டு மயங்குதலும் சோதிடக் குறிப்பும் இடம்பெறுவதோடு அந்த சோதிடக் கணிப்பு படியே கதை நிகழ்கின்றது. மேலும் சீவகன், விமலையுடன் இரண்டு நாள் தங்கித் தன் தோழரைக் காணச் சென்றதாக இந்த பகுதிப் பாத்திரக் கட்டமைப்பை நிறைவு செய்கிறது.

இதில் இடம்பெறுகின்ற பத்து கதாப்பாத்திரங்களைக் காப்பிய ஆசிரியர் விமலையார் இலம்பகத்தின் அமைப்பிற்கேற்ப மிகச்சிறப்பாகக் கட்டமைத்துள்ளார்.

திருத்தக்கத்தேவர் விமலையின் பல்வேறு திறன்களையும் அவளின் அழகினையும் வடிவமைத்ததால் இந்த இலம்பகத் திற்கு விமலையார் இலம்பகம் என்று பெயரிட்டுள்ளார் எனலாம்.

விசயை--சீவகன், தாய் - மகன் முதலான கதாப்பாத்திரங்களை அதற்கே உரிய தாயன்புடன் கட்டமைத்த விதம் வெகுசிறப்பு. சாகரதத்தன் சோதிடன் முதலான கதாப்பாத்திரங்கள் கதையின் திருப்புமுனைக்குக் காரணமாக அமைவது போற்றுதற்குரியது. பதுமுகன் நந்தட்டன் கதாப்பாத்திரங்களை அவர்களுக்கே உரிய பாணியில் சென்று காப்பியத்தை நகர்த்தியுள்ளார் ஆசிரியர். அறநெறியும், பக்குவமும் மிக்க திறமையாளராக விசயையையும், சீவகன் வீரதீரத்துடனும், விமலை கலை அழகுத் திறனுடனும் திகழ்கின்றனர் என்பது இக்கதாப்பாத்திரக் கட்டமைப்பின் வழி புலனாகிறது.

## முடிவுரை

திருத்தக்கத்தேவர் காப்பியத்தில் விமலையார் இலம்பகம் என்று பெயரிட்டாலும் சீவகன் என்ற கதாப்பாத்திரம் தான் அதிகமாக இடம்பெறுகிறது. எனவே, இந்த இலம்பகத்தை சீவகன் விமலை திருமண இலம்பகம் என்று பெயரிட்டாலும் தகும். ஆனால் ஆசிரியர் விமலை பந்தாடுதலின் அழகையும், திருமணத்தையும் மனதிற் கொண்டே இந்த இலம்பகத்திற்கு விமலையார் இலம்பகம் என்று பெயரிட்டுள்ளார் எனக் கருதினாலும், பிற இலம்பகங்கள் மகளிர் பெயரினையே குறிப்பாக அவன் மணந்த மகளிர் பெயரிலேயே அழைக்கப்படுகின்றன. எல்லாவற்றிலும் திருமண நிகழ்ச்சி கூறப்பட்டுள்ளது. எனவே ஆசிரியர் பிற இலம்பகங்கள் போல் விமலையார்

இலம்பகம் என்று பெயரிட்டுள்ளதை நோக்கின், சீவகன் அடுத்து யாரை மணக்க உள்ளான் (கோவிந்தையார் இலம்பகம் தவிர) என்பதை மகளிர் பெயர் வழி இலம்பகத்தை பெயரிட்ட விதம் சாலப் பொருத்தமே என்பது நன்கு தெளிவாகிறது. எனவே ஆசிரியர் திருத்தக்க தேவர் சீவகசிந்தாமணியின் இலம்பகப் பெயர்களை மட்டுமின்றி கதாப்பாத்திரங்களையும் பொருத்தமுறக் கட்டமைத்துக்காட்சிபடுத்தியுள்ளார் என்பது இந்த ஆய்வுக் கட்டுரையின் மூலம் நன்கு தெளிவாகிறது எனலாம்.

### பின்னிணைப்பு

விமலையார் இலம்பகத்தில் இடம்பெறும் பாத்திரங்களின் (கூற்றுகள் வழி) பாடல்கள் எண்ணிக்கை:

| வ. எண் | கதாப்பாத்திரங்களின் பெயர் | பாடல் எண் | மொத்தம் |
|---|---|---|---|
| *1.* | விசயை-சீவகன் | *1908-1932* | *25* |
| *2.* | விமலை-சீவகன் | *1951-1992* | *42* |
| *3.* | சோதிடன்-சாகரதத்தன் | *1977* | *1* |
| *4.* | சாகரதத்தன்-சீவகன் | *1973-1979* | *7* |

1. கட்டியங்காரனும், கோவிந்தனும் விசயையின் கூற்றுகளில் இடம்பெறுகின்றனர்.
2. பதுமுகனும், நந்தட்டனும் சீவகன் கூற்றுகளில் பேசப்படுவர்.
3. சோதிடன் சாகரதத்தனின் கூற்றுகளில் பேசப்படுகிறான்.